பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 09 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.
2. பிரதமரின் அமெரிக்க பயணம் உலக அளவில் இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளனர்.
3. ரயில் விபத்துக்களை தடுக்க வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் அனைத்து ரயில்களிலும் 'கவாச்' தானியங்கி பாதுகாப்பு கருவிகள் பொருத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
4. உஸ்பெக்கிஸ்தான் சென்றுள்ள நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அந்நாட்டு தொழில் வர்த்தக அமைச்சருடன் இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.
5. இலங்கை நாடாளுமன்றத்தை கலைத்து அந்நாட்டு அதிபர் திரு அநுர குமார திஸநாயகே உத்தரவிட்டுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவை தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கியது.

காலை ஏழு மணிக்கு தொடங்கிய இந்த வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறும்.

ஏராளமான மக்கள் காலையிலேயே வாக்களிக்க வரிசையில் நின்று கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

26 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.
வாக்குப்பதிவையொட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தலை சுமூகமாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து வாக்குச்சாடிகளிலும் நடைபெறும் வாக்குப்பதிவை தேர்தல் ஆணையம் இணையதளம் மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்துள்ளது.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று இரவு புதுதில்லி திரும்பினார்.

பிரதமரின் அமெரிக்க பயணம் வெற்றிகரமாக அமைந்ததற்கு மத்திய அமைச்சர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கடந்த பத்து ஆண்டுகளில் உலக அளவிலான மாற்றங்களுக்கு இந்தியா அளித்த ஊக்கத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதமரின் பயணம் அமைந்ததாக கூறியுள்ளார்.

பிரதமர் பங்கேற்ற நிகழ்ச்சிகள் உலக அளவிலான அவரின் புகழை வெளிப்படுத்தும் வகையில் அமைந்ததாகவும் திரு அமித்ஷா குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அமைச்சரும், பிஜேபி தலைவருமான திரு ஜெ பி நட்டா, பிரதமரின் அமெரிக்க பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், நீண்டகால வளர்ச்சியை உள்ளடக்கியதாகவும் அமைந்தது என்று தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வானும் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சரும், மதசார்பற்ற ஜனதாதள தலைவருமான திரு எச் டி குமாரசாமி, அணுசக்தி, செமி கண்டக்டர்ஸ் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பிரதமர் இந்த பயணத்தின்போது முக்கிய முடிவுகளை மேற்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது என்று கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டும் பிரதமரின் அயராது முயற்சிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு குமாரசாமி குறிப்பிட்டுள்ளார்.

பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதள தலைவருமான திரு நிதிஷ்குமார், அமெரிக்க பயணத்தின்போது பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் எடுத்த முடிவுகள் இந்தியாவுக்கும், மற்ற நாடுகளுக்கும் முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையில் அமைந்ததாகக் கூறியுள்ளார்.

ஆந்திர மாநில முதலமைச்சரும், தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான திரு சந்திரபாபு நாயுடு, உலக நாடுகளுக்கு இடையே இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்துவதாக பிரதமர் திரு நரேந்திரமோடியின் அமெரிக்க பயணம் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் நல்லுறவில் உள்ள உலக நாடுகளின் தலைவர்களை ஒன்றிணைக்கும் வகையில் பிரதமரின் ஐ நா உரை அமைந்திருந்ததாகவும் திரு சந்திபாபு நாயுடு பாராட்டு தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டேயும் பிரதமரின் அமெரிக்க பயணத்தின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் ரயில் விபத்துக்களை தடுக்க வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் அனைத்து ரயில்களிலும் 'கவாச்' எனப்படும் தானியங்கி பாதுகாப்பு கருவிகள் பொருத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் கவாச் பொருத்தப்பட்ட ரயில் சோதனை ஓட்டத்தை பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பத்தாயிரம் ரயில் எஞ்ஜின்கள் மற்றும் ஒன்பதாயிரம் கிலோ மீட்டர் தொலைவிலான ரயில் பாதைகளில் கவாச் கருவிகள் விரைவில் பொருத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த கருவிகளைப் பொருத்துவதன் மூலம் ரயில் விபத்துக்களை தடுக்க முடியும் என்று திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியா சென்றுள்ள மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு கூட்டமைப்பின் தேசிய மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர், இந்த துறையில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் நலன்களை பாதுகாக் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்,

பின்னர் இந்திய – ஆஸ்திரேலிய வர்த்தக கவுன்சில் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்றார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான கூட்டுறவு மற்றும் பொருளாதார உறவுகள் மிகவும் வலுவடைந்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்திய – ஆஸ்திரேலிய வர்த்தக கூட்டமைப்பு மற்றும் இந்தோ பசிபிக் பொருளாதார கட்டமைப்பு நிகழ்ச்சியிலும் திரு பியூஷ் கோயல் கலந்து கொண்டார்.

**[]<<<>>>[]**

உஸ்பெக்கிஸ்தான் சென்றுள்ள நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று அந்நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் **Laziz kudrotov** -யை சந்தித்து பேசினார்.

அப்போது இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உரம் மற்றும் மருந்து துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விரிவான ஆலோசனை நடத்தியதாக நிதி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுகாதாரம், சுற்றுலா, உயர்கல்வி, ஜவுளி மற்றும் வேளாண் துறைகளில் பரஸ்வரம் சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் குறித்தும் அவர்கள் பேச்சுக்கள் நடத்தியதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் டிஜிட்டல் முறையிலான பரிவர்த்தனையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து உஸ்பெக்கிஸ்தான் அமைச்சர் பாராட்டு தெரிவித்ததாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நேரடி வரிகள் தொடர்பான 573 வழக்குகளை உச்சநீதிமன்றம் நேற்று முடித்து வைத்திருப்பதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வரி தொடர்பான வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரும் மத்திய அரசின் குறிப்பிடத்தக்க ஒரு நடவடிக்கையாக இந்த வழக்குகள் முடித்து வைக்கப்பட்டிருப்பதாக நிதி அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் மூலம் எளிதான முறையில் வர்த்தகம் மேற்கொள்ளப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேரடி வரிகள், சேவை வரி போன்றவற்றில் நிலுவையில் உள்ள மேல்முறையீடு வழக்குகளில் ஐந்து கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்பு கொண்ட வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும் என மத்திய

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ நா பொதுச்சபையின் 79-வது ஆண்டு கூட்டம் நியூயார்க்கில் தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர் வரும் சனிக்கிழமை உரையாற்றவுள்ளார்.

எதிர்கால தலைமுறையினருக்கான அமைதி, நீடித்த வளர்ச்சிக்கான முன்னேற்றம் என்ற தலைப்பில் இந்த ஆண்டு ஐ நா சபையில் விவாதம் நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

இலங்கை நாடாளுமன்றத்தை கலைத்து அந்நாட்டு அதிபர் திரு அநுர குமார திஸநாயகே உத்தரவிட்டுள்ளார்.

வரும் நவம்பர் மாதம் 14-ஆம் தேதி இலங்கை நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கான அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த மாதம் நான்காம் தேதி முதல் 11-ஆம் தேதிவரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே தேசிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த திருமதி ஹரிணி அமர சூரியா அந்நாட்டு இடைக்கால பிரதமராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

அவருடன் விஜிதா கெராத் அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பதவியேற்று 100 நாட்கள் நிறைவடைந்த நிலையில் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கட்டமைப்பு மற்றும் விவசாயிகள், நடுத்தர பிரிவினர், மகளிர் மற்றும் இளைஞர்களுக்கான திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

100 நாட்களில் மத்திய அரசு பல சிறப்பான திட்டங்களை நிறைவேற்றி இருப்பதாக கன்னியாகுமரி மற்றும் விழுப்புரம் மாவட்ட பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

*( சவுண்ட்பைட் - பொதுமக்கள் ) ----70 செகண்ட்*

**[]<<<>>>[]**

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிர்வாகக்குழுக் கூட்டம் மும்பையில் இன்று நடைபெறுகிறது.

பெங்களூருவில் வரும் 29-ஆம் தேதி பி சி சி ஐ ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் இன்றைய கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

**[]<<<>>>[]**

ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டல் நடைபெற்ற 45-வது செஸ்ஒலிம்பியாட் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த மூன்று வீரர் வீராங்கனைகள் மற்றும் அணித்தலைவர் ஆகியோருக்கு 90 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகைக்கான காசோலையை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

***End of News***